செ.வெ.எண்.50 நாள்: 19.09.2017

# <u>திருநெல்வேலி மாவட்டம் தாமிரபரணி ஆற்றினை சுத்தப்படுத்தி தூய்மைப்படுத்தும் பணிகளை இரண்டாம் கட்டமாக 23.09.2017 சனிக்கிழமை அன்று நடத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது</u>

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தாமிரபரணி ஆற்றின் சுற்றுச்சூழலை பாதுகாத்து சுத்தப்படுத்தி தூய்மைப்படுத்துவதற்காக 23.09.2017 சனிக்கிழமை அன்று இரண்டாம் கட்டமாக தூய்மைப்பணிகளை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.09.2017) நடைபெற்றது.

தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் தூய்மைப்படுத்துதல் தொடர்பான வரைவுத்திட்டம் தயார் செய்யப்பட்டு ஏற்கனவே முதற் கட்டமாக 16.07.2017 அன்று தூய்மைப்படுத்தும் பணிகள் சிறப்பாக நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து 23.09.2017 வரும் சனிக்கிழமை அன்று இரண்டாம் கட்டமாக தூய்மை பணிகளை நடத்துவதற்கு 30-க்கும் மேற்பட்ட கல்லூரிகளின் பிரதிநிதிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகள், முன்னணி நிறுவனங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள் தெரிவித்ததாவது:-

23.09.2017 அன்று இரண்டாம் கட்டமாக நடைபெறும் தூய்மைப்படுத்தும் பணிகளில் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த 10000-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தங்களை இணைத்துக் கொள்ள உள்ளார்கள். இப்பணியானது பாபநாசம் முதல் சீவலப்பேரி வரை 60க்கும் மேற்பட்ட இடங்களில் தாமிரபரணி ஆற்றினை தூய்மைப்படுத்தும் பணிகள் 23.09.2017 அன்று காலை 7.30 மணிக்கு தொடங்கி காலை 10.30 மணி வரை நடைபெற உள்ளது.இப்பணிகளில் சிறப்பாக செயல்படவுள்ள கல்லூரிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகள், நிறுவனங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். தாமிரபரணி தூய்மை பணிகளில் அனைத்துத்துறை அலுவலர்களும், கல்லூரி மாணவ, மாணவியர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெறும் இடங்களில், தங்களை ஈடுபடுத்திக் கொள்ள விருப்பமுள்ள ஆர்வாலர்கள் **9566793188–9566688724** தொலைபேசி எண்ணில் முன்னதாக தகவலை தெரிவித்துக் கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாநகராட்சி நகர் நல அலுவலர் மரு.பொற்செல்வன் மற்றும் கல்லூரிகளின் மாணவ, மாணவிகள், தன்னார்வ தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னணி நிறுவனங்களின் அமைப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி